## குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை

## பத்திரிக்கை செய்தி

தூத்துக்குடி மாவட்டத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச்சேவைகள் துறையின்கீழ் இளைஞர் நீதிக் குழுமத்திற்கு கூடுதல் பணியிடங்களான உதவியாளர் மற்றும் அமர்வு எழுத்தர் –1, இளநிலை உதவியாளர் உடன்இணைந்த பதிவேடு எழுத்தர் –1, அலுவலக உதவியாளர்–1 ஆகிய பணியிடங்களுக்கு முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதிய ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண் | பணியிடம் | கல்வி தகுதிகள் | தொகுப்பூதியம் (ஒரு மாதத்திற்கு) ரூ. |
|---|---|---|---|
| 1 | உதவியாளர் மற்றும் அமர்வு எழுத்தர் (1) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் 10+2+3 அல்லது 11+1+3 என்ற கல்வி முறையில் அறிவியல், கலை, வணிகவியல், பொறியியல், மருத்துவம் அல்லது இதர பாடபிரிவில் இளங்கலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். உதவியாளர் (Assistant) பணிக்கு நேரடி நியமனம் செய்யப்படும்போது தொழில்நுட்பக்கல்வி இயக்ககத்தால் (Directorate of Technical Education) நடத்தப்படும் Computer on Office Automation பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கணினி தொடர்பான பட்டயம் (Diploma) அல்லது பட்டயப்படிப்பு (Degree) முடித்தவர்களுக்கோ முன்னுரிமை அளிக்கப்படும்.<br><br>(42 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்) | ரூ.25,000/– |
| 2 | இளநிலை உதவியாளர் உடன்இணைந்த பதிவேடு எழுத்தர் ( 1) | 10ம் வகுப்பு பொதுத்தேர்வு அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br><br>(42 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்) | ரூ.20,000/– |
| 3 | அலுவலக உதவியாளர் (1) | 8ம் வகுப்பு அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br><br>(42 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்) | ரூ.13,000/– |

நிபந்தணைகள்:

1. மேற்கண்ட பணியிடம் முற்றிலும் தற்காலிகமானது.
2. மேற்கண்ட பணியிடத்திற்கு பணியமர்த்தப்படும் பணியாளர்கள் நிர்வாக காரணங்களுக்கான எவ்வித முன்னறிவிப்புமின்றி பணிநீக்கம் செய்திட நிர்வாகத்திற்கு அதிகாரம் உள்ளது.
3. மேற்காணும் பணியிடத்திலிருந்து பணி நீக்கம் செய்யப்படும்பட்சத்தில் அப்பணிக்கான எவ்வித உரிமை கோரலையும் பணியாளர் கொண்டிருக்க மாட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட பணியிடத்திடத்திற்கான விண்ணப்பபடிவத்தை தூத்துக்குடி மாவட்ட இணையதளத்தில் (https://thoothukudi.nic.in) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது தூத்துக்குடி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தகுதி வாய்ந்த நபர்கள் மேற்கண்ட பதவிக்கு அதற்கான அமைந்த படிவத்தில் (செய்தி வெளியீடு நாளிலிருந்து 15 நாட்களுக்குள்) மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, 176, முத்துசுரபி பில்டிங், மணிநகர், பாளை ரோடு, தூத்துக்குடி மாவட்டம்– 628 003 , தொலைபேசி எண் – 0461–2331188 முகவரியில் கிடைக்கப்பெறுமாறு விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டும். மேலும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள், கல்வி சான்றிதழ் நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் காலதாமதமாக வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் நியமனம் அமையும்.

S.d/–VISHU MAHAJAN I.A.S.,

District Collector

13–09–2026

Thoothukudi .